### வன்னியர்களுக்கான 10.5% இட ஒதுக்கீட்டிற்கு

# சட்டரீதியான பாதுகாப்பு பெற்றுத் தர போராடியது தி.மு.க. அரசு!

## சட்டமன்றத்தில் கழக கொறடா எ.வ.வேலு பேச்சு!



சென்னை, ஆக. 29 -

சட்டமன்றத்தில் கழக கொறடா எ.வ.வேலு பேசுகையில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டிற்கு சட்டரீதியான பாதுகாப்பு பெற்றுத்தர போராடியது தி.மு.க. அரசு என்று குறிப்பிட்டார்.

சட்டமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது கழக கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-

இந்திய புள்ளி விபரச் சட்டம் 2008 ன் படி மாநில அரசு புள்ளி விவரங்களை சேகரிக்க இயலாது என்பதால் ஒன்றிய அரசின் சார்பில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த 20 10 2022 அன்று பாரதப் பிரதமருக்கு எங்கள் ஆட்சியில் கடிதம் எழுதினோம்,

ஒன்றிய அரசு சேகரிக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையிலே, தான் சட்ட ரீதியான பாதுகாப்பு இருக்கும் என்றுஅன்றைய திமுக அரசு கருதியது, ஆகையால் 26 6 2022 அன்று சாதிவாரி கணக்கெடுப்பை தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைந்து நடத்த வேண்டும் என்று இதே பேரவையில் ஒரு தீர்மானம் போட்டு அதனை ஒன்றிய அரசுக்கு அனுப்பினோம்.

மேலும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய தலைவராக இருந்த முன்னாள் நீதி அரசர் ஜனார்த்தனன் அவர்கள் தனது பரிந்துரையில் சாதிவாரி கணக்கெடுப்பை ஒன்றிய அரசுதான் நடத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார்,

அதுமட்டுமல்ல நாடாளுமன்றத்தில் பாரதப் பிரதமர் அவர்கள் பேசும்போது பல மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துகிறார்கள் , ஆனால் அவர்களுக்கு அந்த அதிகாரமே கிடையாது என்றும், மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தும்போதுதான் சாதி வாரி கணக்கெடுப்பை சேர்த்து நடத்த முடியும் என்றும் கூறியவை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

**அவசரக் கோலமிட்ட எடப்பாடி!**

அதன் அடிப்படையிலும் நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

கடந்த தி.மு.க. ஆட்சி காலத்திற்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதல்வராக இருந்த போது வன்னியர்களுக்கு 10.5% இட ஒதுக்கீடு வேண்டும் என்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், தேர்தல் நேரத்தில் அவசர அவசரமாக எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துவிட்டு போய் விட்டார்.

ஆனால் அதற்குப் பின்பு ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்ற கழகம் 10.5% இட ஒதுக்கீட்டை பெற்றுத் தருவதில் உறுதியாக இருந்தது,

**தி.மு.க. உறுதிய துணை இருக்கும்!**

அதற்கு உரிய சட்டப் பாதுகாப்பை பெற்று தர வேண்டும் என்று தி.மு.க. எண்ணியிருந்த போது சட்டமன்றத்திலே பேசிய பா.ம.க. சட்டமன்ற தலைவர் ஜி.கே.மணி அவர்களும் அதை வலியுறுத்தினார், மேலும் பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களை முதலமைச்சர் சந்திக்க வேண்டும் என்று கடிதமும் கொடுத்தார்,

அதன் பின்னர் தான் வன்னியர்களுக்கான 10.5% இட ஒதுக்கீட்டை சட்டரீதியாக உறுதி செய்வதற்காக , சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது, அங்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்ததை தொடர்ந்து, உச்சநீதி மன்றத்திற்கு சென்று மேல்முறையீடு செய்தோம், மேல்முறையீட்டில் உச்சநீதிமன்றம் மக்கள் தொகை குறித்த விவரங்கள் கேட்டதால் உடனடியாக ஓய்வு பெற்ற நீதிபதி பாரத ரத்னா தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஆகவே வன்னிய சமுதாயத்திற்கு 10.5 சதவீதம் இட ஒதுக்கீடு பெற்று தருவதில் திமுக எப்போதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளது என்பதையும், தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### முரசொலி பாசறை பக்கத்தில் எழுதியவர் ந.வினோத் குமார்!

# சமூகநீதி சிந்தனையோடு தன் சீரிய எழுத்துப்பணியை தொடர்ந்த ஓர் எழுத்தாளரை இழந்திருக்கிறோம்!

## பத்திரிகையாளர் – எழுத்தாளர் ந.வினோத்குமார் மறைவையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



சென்னை,ஆக.29 -

பத்திரிகையாளர் - எழுத்தாளர் ந.வினோத்குமார் அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் டிவிட்டர் பதிவு வருமாறு:

இளம் பத்திரிகையாளர் ந.வினோத்குமார் அவர்கள் மறைவுற்றார் என்பது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது.

விகடன், தமிழ் இந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா உள்ளிட்ட நாளேடுகள், புதிய தலைமுறையின் ஆங்கில இணையதளமான 'தி ஃபெடரல்' ஆகியவற்றில் பணியாற்றியவர் ந.வினோத்குமார்.

கழகத்தின் இளைஞர் அணி சார்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் முரசொலி பாசறை பக்கத்தில், 'முதன்முதலில்', 'சீரணி', 'இடம் – பொருள் – கலைஞர்' என 3 முக்கியத் தொடர்களை எழுதியுள்ளார். 'திராவிட மாடல் அரசு' தொடரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

'தமிழரசு கலைஞர்', 'புத்தர் இன்றும் சிரிக்கிறார்', 'வான்–மண் – பெண்', 'வேட்டைக்கார ஆந்தையின் தரிசனம்', 'பாப்லோ The boss' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். 'முந்நூறு ராமாயணங்கள்', 'நிலம் – துப்பாக்கி – சாதி', 'அமர நாயகன்' உள்ளிட்ட பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

உடல்நலப் பாதிப்புகளையும் பொருட்படுத்தாமல், சமூகநீதி சிந்தனையோடு தன் சீரிய எழுத்துப்பணிகளைத் தொடர்ந்த ஓர் எழுத்தாளரை இழந்திருக்கிறோம் என்பது ஈடு செய்ய இயலாதது.

அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், குடும்பத்தினர் மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### எதை முன்னால் சொல்வது – எதை பின்னால் சொல்வது என்பதில்

# த.வெ.க. அரசுக்கு பெரும் குழப்பம்!

## திரைப்பட கிளைமேக்ஸ் முதலிலேயே வரலாமா என தங்கம் தென்னரசு நகைச்சுவை விமர்சனம்!



சென்னை, ஆக. 29 -

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற கூட்டத்தின்போது, சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் ஆகஸ்ட் 25ஆம் தேதி நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதம் சிறப்பாக நடைபெற்றதாகத் தெரிவித்தார். மேலும், முதன்முறையாக 9 மணி 43 நிமிடங்கள் தொடர்ந்து அவை நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார். எனினும், அவை நேரத்தை கருத்தில் கொண்டு, அறிவிப்புகளை வெளியிடும் அமைச்சர்கள் இனி முதலில் அறிவிப்புகளை வெளியிட்ட பின்னர், அதனைத் தொடர்ந்து பதிலுரை வழங்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்படும் என அறிவித்தார்.

இதற்கு பதிலளித்த திருச்சுழி சட்டமன்ற உறுப்பினர் தங்கம் தென்னரசு, அமைச்சர்கள் அறிவிப்புகளை வெளியிட்ட பிறகு பதிலுரை வழங்குவது என்பது, திரைப்படத்தில் க்ளைமாக்ஸ் காட்சியை முதலில் போடுவது போல இருக்கும்.

தவெகவின் க்ளைமாக்ஸை அனைவரும் நிச்சயமாகப் பார்ப்போம். உங்களுடைய க்ளைமாக்ஸையும் கட்டாயம் காத்திருந்து பார்ப்போம் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், இன்று காலையிலிருந்தே எதை முதலில் சொல்வது, எதை பின்னால் சொல்வது என்பதில் தொடர்ந்து மாற்றம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

காலையில் வந்தவுடனே, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பதில் சொல்லட்டும்; அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள் என்று சொன்னீர்கள். இப்போது அறிவிப்புகளை எல்லாம் முன்னதாக வெளியிட்டுவிட்டு, பின்னர் அதுகுறித்து பேசுங்கள் என்கிறீர்கள்.

மொத்தத்தில் பேரவைத் தலைவர் படுத்துக்கட்டும், போர்த்திக்கலாம்; போர்த்திவிட்டும் படுத்துக்கலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்துவிட்டாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன் என நகைச்சுவையாகக் கூறினார்.

---

### பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கோடு

# அரசியலை சம்பந்தப்படுத்துவது பொதுப்பணித்துறை அமைச்சருக்கு அழகல்ல!

## சட்டமன்றத்தில் பி.கே.சேகர்பாபு ஆவேச பேச்சு!



சென்னை, ஆக. 29 -

சட்டமன்றத்தில் பகுஜன் சமாஜ் கட்சி தமிழ்நாடு தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப் பட்டது தொடர்பாக பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறிய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக சட்டமன்ற உறுப்பினர் பி.கே. சேகர்பாபு அவர்கள் பேசியதாவது:

பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் தேதி இரவு படுகொலை செய்யப்பட்டார், இதையடுத்து அப்போதைய காவல்துறை விரைந்து செயல்பட்டு கொலையில் சம்பந்தப்பட்டவர்களை இரவோடு இரவாக கைது செய்யப்பட்டனர்,

அதன் பிறகு அப்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று அவரது மனைவிக்கு ஆறுதல் கூறி இந்த குற்றத்திற்கு தவறுக்கு யார் காரணமாக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி அளித்தார், இந்த நிகழ்வின்போது நானும் உடன் இருந்தேன்,

அதுமட்டுமல்ல ஆம்ஸ்ட்ராங் அவர்களுடைய பிரேதம் வைப்பதற்காக பள்ளி மைதானத்தை கேட்டார்கள் வழங்கினோம், மேலும் 16ஆம் நாள் காரியத்திற்கு பள்ளி மைதானத்தை கேட்டார்கள் அதையும் வழங்கினோம், அவர் பிரேதத்தை அடக்கம் செய்து மணிமண்டபம் கட்டுவதற்கு அவரது சொந்த இடம் உள்ள மாதவரம் பகுதியில் அனுமதி கேட்டார்கள், அந்த அனுமதியும் வழங்கியது தான் அப்பொழுது இருந்த திமுக அரசு, இதையெல்லாம் ஏன் இங்கே சொல்கிறேன் என்றால் ஒரு கட்சியினுடைய தலைவரின் படுகொலையை ஒரு குற்ற உணர்வோடு திசை திருப்பக் கூடாது, அந்த வழக்கு தற்பொழுது சிபிஐ வசம் உள்ளது , சிபிஐ என்ன சொன்னாலும் ஒத்துழைக்கத் தயாராக உள்ளோம், இவ்வழக்கில் சிபிஐயோடு என்றைக்கும் நாங்கள் நிச்சயம் நிற்போம்.

எங்களைப் பொறுத்த வரை அரசியல் மாறுபாடுகள் என்பது கருத்துக்களோடு தான் மோதுவோமே தவிர வன்முறைக்கு செல்லும் இயக்கம் நாங்கள் அல்ல என்பதை மாண்புமிகு பேரவை தலைவர் வாயிலாக பொதுப்பணித் துறை அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் பொறுப்புள்ளவர், இப்படி வழக்கு ஒன்றோடு அரசியலை சம்பந்தப்படுத்தி பேசுவது அவருக்கு நாகரிகமாக இருக்காது என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

---

### 68 – சமூக மக்கள் – சீர்மரபினர் பிரிவினருக்கு

# 'டி.என்.டி.' ஒரே சான்றிதழாக வழங்கிட வேண்டும்!

## சட்டப் பேரவையில் தி.மு.இராஜேந்திரன் கோரிக்கை!



சென்னை, ஆக. 29 –

68 சமூக மக்கள் – சீர்மரபினர் பிரிவினருக்கு டி.என்.சி., டி.என்.டி. என்று சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதனை டி.என்.டி. என்று ஒரே சான்றிதழாக வழங்க வேண்டும் என்று பேரவையில் கழக உறுப்பினர் தி.மு.இராஜேந்திரன் கோரிக்கை வைத்தார்.

பேரவையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மானியக் கோரிக்கையின் போது குறுக்கிட்டு கழக உறுப்பினர் இராசேந்திரன் எழுப்பிய கேள்வி வருமாறு:

சீர்மரபினர் மாணவர் விடுதியில் நான்கு ஆண்டுகள் தங்கிப்படித்து பள்ளிக் கல்வியை நிறைவு செய்தவர்கள் 68 சமூக மக்கள் சீர்மரபினர் பிரிவில் உள்ளனர். தற்போது இச் சமூக மக்களுக்கு DNC/DNT என்ற சாதிச் சான்றிதழ் வழங்கப் படுகின்றன.

இதனை மாற்றி 1979–க்கு முன்னர் இருந்தது போல DNT (Denotified Tribes) என்று ஒரே சான்றிதழாக வழங்கிட வேண்டும். தமிழ்நாட்டின் மத்திய மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களிலும் மிகுதியாக வாழ்கின்ற சீர்மரபினருக்கு DNT சான்றிதழ் வழங்குவதால் தமிழகத்தில் தற்போது வழங்கப்படும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இட ஒதுக்கீட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது. மாறாக, ஒன்றிய அரசு பிற்படுத்தப் பட்ட வகுப்பினரை வகைப்படுத்தும் போது தங்களுக்கு கூடுதல் சலுகைகள் கிடைக்கும் எனது கருதுகின்றனர்.

எனவே சீர்மரபினர் பிரிவில் உள்ள 68 சமூகத்தினரின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு DNT என்ற ஒரே சான்றிதழ் வழங்கிட வேண்டுமென இந்த அவையின் கவனம் ஈர்க்கின்றேன் என்று தெரிவித்தார்.

இதற்கு பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார் பதிலளிக்கையில்,

எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு கீழ்க்கண்ட பதிலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.டி. ஆக்ட் என்று சொல்லப்படுகிற குற்றப்பரம்பறை சட்டம் 1920 – இல் சீர்மரபினர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 68 சமூகத்தினர் 1979 வரை DNT என அழைக்கப்பட்டு தற்போது DNC/DNT என சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர் ஒரே சான்றிதழாக DNT என வழங்குமாறு கோரிக்கை வைத்தார். தற்போது இக்கோரிக்கை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இவ் வழக்கின் தீர்ப்பு கிடைக்கப் பெற்ற பின்னர் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

---

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# அன்பில் பொய்யாமொழி 27 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை!



திருச்சி, ஆக. 29 -

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், திமுக இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவருமான, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான, அன்பில் பொய்யாமொழி அவர்களின் 27 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினார்.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மு.மதிவாணன், வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, பகுதி செயலாளர் மோகன், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியதாவது:

"சட்டமன்றம் சட்டமன்றமாக இல்லாமல், சண்டை மன்றமாக மாறியுள்ளது. சட்டமன்றம் சண்டை மன்றமாக மாறக் கூடாது. மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும்.

முதலமைச்சர், மக்கள் அன்புடனும் நம்பிக்கையுடனும் ஆட்சிப்பொறுப்பை வழங்கியுள்ளதாகக் கூறுகிறார். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்க்கட்சிகள் கேட்கும் கேள்விகளுக்கு 'டூ த பாயிண்ட்' என்ற வகையில் நேரடியாகப் பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு துறைக்கும் அந்தந்த துறை அமைச்சர்களே பதிலளிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

புதிய அமைச்சர்கள் சட்டமன்றத்திற்கு வந்துள்ளதால், ஆரம்பத்தில் அனுபவக் குறைபாடு இருக்கலாம். ஆனால், எத்தனை நாட்களுக்கு இந்த அனுபவக் குறைபாடு தொடரும் என்ற கேள்வி எழுகிறது.

மானியக் கோரிக்கைகளின்போது முதலில் துறை சார்ந்த சாதக, பாதகங்கள் குறித்து விவாதம் நடத்த வேண்டும். அதன்பிறகே புதிய அறிவிப்புகளை வெளியிட வேண்டும். ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்புகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பது அடுத்தகட்ட விவாதமாக இருக்க வேண்டும்.

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள துயரச் சம்பவம் உள்ளிட்ட மக்கள் உயிர் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பும் போது, அரசு தரப்பினர் எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தெளிவாக விளக்க வேண்டும்.

துறை சார்ந்த செயலாளர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் இருப்பதால், சம்பந்தப்பட்ட துறை அமைச்சரே பதிலளிப்பது நம்பகத்தன்மையை ஏற்படுத்தும்.

மேகதாது அணை விவகாரத்தில் அமைச்சர்கள் வெவ்வேறு கருத்துகளைத் தெரிவிப்பதால், டெல்டா விவசாயிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் முதலமைச்சரின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவாக இருக்க வேண்டும்.

மேகதாது விவகாரத்தில் கர்நாடகாவில் அனைத்து கட்சிகளும் ஒன்றாக நிற்கும் நிலையில், தமிழகத்திலும் மாநில உரிமையைப் பாதுகாக்க அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

PM SHRI திட்டம் தொடர்பாக தமிழகத்திற்கு வர வேண்டிய சுமார் 5,109 கோடி நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும். இந்த நிதி கிடைக்காததால் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட விஷயங்களில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

PM SHRI நிதி தொடர்பாக ஒன்றிய அரசிடம் தாம் நேரடியாகப் பேசியதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அப்போதைய ஒன்றிய அமைச்சரைச் சந்தித்ததாகவும், ராகுல் காந்தியிடமும் இதனால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்ததாகவும் தெரிவித்தார். பட்டியலின மக்களுக்கு புதிய அங்கீகாரமும், புதிய திட்டங்களும் கிடைக்க வேண்டும். வன்னியரசு முன்பு பேசிய கருத்துகளுக்கும், தற்போது சட்டமன்றத்தில் அவர் பேசும் கருத்துகளுக்கும் வித்தியாசம் இருப்பது வருத்தமளிக்கிறது.

லஞ்சம் தொடர்பாக அமைச்சர் முன்பு தெரிவித்த கருத்தை பின்னர் மாற்றிப் பேசியதாகக் குற்றம்சாட்டிய அவர், சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும், அவைக்குறிப்பில் இடம் பெற்றுள்ள கருத்தை நிரூபிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். முதலில் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டு, அதன் பிறகு இந்திய பிரதமர் அல்லது அமெரிக்க அதிபர் கனவு பற்றி பேசலாம். அதில் தவறில்லை.

பெண்களுக்கு வழங்குவதாகக் கூறிய 2,500 மகளிர் உரிமைத்தொகை, படித்த இளைஞர்களுக்கு வழங்குவதாகக் கூறிய 4,000, மீனவர்களுக்கு வழங்குவதாகக் கூறிய 2,000 இடைக்கால நிதி உள்ளிட்ட வாக்குறுதிகள் என்ன ஆனது என கேள்வி எழுப்பினார்.

ஆறு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் எனக் கூறிவிட்டு, தற்போது மூன்று சிலிண்டர்கள் என மாற்றியுள்ளதாகவும், இலவச பேருந்து பயணம் உள்ளிட்ட வாக்குறுதிகளிலும் அரசு தெளிவான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

மொத்தத்தில், சட்டமன்றத்தில் சச்சரவுகளைத் தவிர்த்து, மக்கள் பிரச்சினைகள், மாநில உரிமைகள் மற்றும் அரசு அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்பதே முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் பேட்டியின் முக்கிய கருத்தாக அமைந்தது.